சம்மாந்துறை பிரதேச சபை
அம்பாறை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 23 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து சம்மாந்துறை பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்காக மீளாய்வாண்டில் செலுத்தவேண்டிய ரூபா.65,925 கூட்டுமொத்த தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 152,345 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்புக்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் யுநெப்ஸ் (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 13 அலுவலக உபகாரணங்களின் பெறுமதி, மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் பல்வேறு நபர்கள் மூலம் அன்பளிப்பு செய்யப்பட்ட 573 நூலக புத்தகங்களின் பெறுமதி ரூபா.93,231 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை.

(ஊ) ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 தொகையான சில்லறைக் காசு முற்பணம் அவரால் மீளாய்வாண்டின் போது தீர்த்துவைக்கப்பட்டிருந்தும் சில்லறைக் காசு முற்பணக் கணக்குக்கு செலவு வைக்கப்படாமையால் சில்லறைக் காசு முற்பணக் கணக்கு மீதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2005 ஆம் ஆண்டில் காணமால் போன ரூபா 95,670 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றில் கணக்கிடப்பட்டுள்ளது

(ஏ) பேரேட்டின் படி சொத்துரிமை பெயர் மாற்றல்படிவ விற்பனை வருமானம் ரூபா 30,100 தொகையாக இருந்தபோதிலும், அது நிதிக் கூற்றுக்களில் ரூபா 153,818 ஆகக் காட்டப்பட்டதனால் அவ்வருமானம் ரூபா 123,718 தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஐ) பேரேட்டின் படி கொள்கலம் சேவைக்கட்டண வருமானக் கணக்கின் மீதி ரூபா.151,900 தொகையாக இருந்தபோதிலும், நிதிக்கூற்றில் ரூபா 30,404 தொகையால் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

1.3.3 தொங்கல் கணக்கு

2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரை தொங்கல் கணக்கு மீதியாக ரூபா 6,210 காட்டப்பட்டு வருகின்ற போதிலும், அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 பெறவேண்டிய கணக்கு

28 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 512,706 கடன் மீதியை அறவிடுவதற்கு 2014 யூலை 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணி கட்டடிடம் | 10,430,028 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மைய்வு அறிக்கைகள் |
| உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் | 1,269,343 | |
| நூலக புத்தகங்கள் | 749,992 | |
| அலுவலக உபகரணங்கள் | 114,240 | |
| தீர்க்கப்படாத முற்பணங்கள் | 585,242 | விபரமான பட்டியல், முற்பண பதிவேடு மற்றும் உறுதிச்சீட்டுக்கள் |

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.17,964,998 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.3,653,917 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.14,311,081 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------------------

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டிய ரூபா.6,342,445 கூட்டு மொத்தமான வீதவரிகளில் 28% ஆன ரூபா.1,800,046 தொகையான வீதவரிகளே மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் வீதவரியாகச் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா.3,887,719 தொகையில் 13% ஆன ரூபா.505,403 தொகையே அறவிடப்பட்டிருந்தது.

2.2.2 உத்தரவுப்பத்திரக்கட்டணம்

------------------------------------------

2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு இறுதிவரைக்கும் அறவிடப்படவேண்டிய உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா.142,669 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 ஏனைய வருமானம்

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 இன் (vii)(8) மற்றும் (xxx) ஆம் உப பிரிவுகள் மற்றும் 1644 ஆம் இலக்க 2010 மார்ச் 05 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 27 விளம்பரப் பலகைகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 279,990 தொகையான கட்டணங்களை 2014 யூலை 10 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 மார்ச் 05 ஆம் திகதிய 1644 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவப்பட்ட 05 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அறவிடப்படவேண்டிய ரூபா 410,000 தொகையான உரிமைக்கட்டணத்தை 2014 யூலை 10 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள இறைச்சிக் கடைக் குத்தகைப் பணமாகிய ரூபா 12,239,621 தொகையை அறவிடுவதற்கு அல்லது மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுச் சந்தைக் கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ரூபா 1,813,278 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டு 2012 ஆம் இறுதிவரை வைப்புப் கணக்கில் காட்டப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி மற்றும் பிடித்து வைத்தல் வரி ரூபா.53,874 மொத்த தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தாமல் வருமானக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்பட்ட ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு ரூபா.62,768 தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தாது வருமான கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) சம்மாந்துறை கிராமத்தின் எல்லையில் வீதிக்கு மேலாக உங்களை வரவேற்கின்றோம் எனக் குறிப்பிட்டு நிர்மாணிக்கப்பட்ட வரவேற்புத் தோரணத்திற்கான வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இவ் வேலை தொடர்பாக 2005 ஆம் ஆண்டில் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூபா.2,000,000 தொகையை 2014 யூலை 10 ஆந் திகதி வரை அப் பணியகத்தினால் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் உள்ள 42 கடைகளில் 12 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஒருவருட காலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(ஆ) வளத்தாப்பிட்டி சந்தைக் கட்டிடங்களையும் அதனோடு இணைந்த கடைகளையும் மற்றும் மல்வத்தை சந்தைக் கட்டிடங்களையும் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 08 மாதங்களுக்கு மேலாக பயன்பாடற்றுக் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

தெயட்ட கிருள்ள நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் மல்வத்தை சந்தைக் கட்டிடம் திருத்தம் செய்யப்பட்டு பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளுக்காக ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட சிட்டைகளில் 04 வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர் ரூபா 347,217 தொகையை கோரியிருந்த போதிலும் ரூபா 429,587 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆகவே ரூபா 82,370 தொகை மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஊ) வீதி விளக்குகள் பராமரித்தல்